

ශ්‍රී ලංකා සංචාරක සංවර්ධන අරමුදල
சுற்றுலா அபிவிருத்தி நிதியம்
SRI LANKA TOURISM DEVELOPMENT FUND

# වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை
# ANNUAL REPORT
# 2020

SO SRI LANKA



இலங்கை சுற்றுலா
அபிவிருத்தி அதிகார சபை

# வருடாந்த அறிக்கை
# 2020

SO SRI LANKA



கௌரவ பிரசன்ன ரணதுங்க
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

கௌரவ அமைச்சர் அவர்கள்,
சுற்றுலா அபிவிருத்தி நிதியம்

2005இன் சுற்றுலாத்துறை சட்ட இல 38இன் 23(1) பிரிவின் கீழ் சுற்றுலா அபிவிருத்தி நிதியம் (TDF) தாபிக்கப்பட்டது என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். இந்நிதியம் சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்கும் மேம்பாட்டிற்கும் பயன்படுத்தப்படுதல் வேண்டும். இதன் சேகரித்தல் மற்றும் விநியோகித்தல் முறை இச்சட்டதில் குறித்துக் காட்டப்பட்டுள்ளது.

2005இன் சுற்றுலாத்துறை சட்ட இல 38இன் 23(2) பிரிவின் பிரகாரம், சிவில் விமானத்துறை அதிகாரசபை புறப்படுதல் வரி(EL)யில் 1/3 இனை (அ.டொலர் 5இற்குச் சமமான) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு (SLTDA) மாற்றுகின்றது.

மேலும், சுற்றுலா அபிவிருத்தி வரி (TDL) என அழைக்கப்படும் மற்றுமொரு வரி SLTDA யினால் சுற்றுலாத்துறை தொடர்பான வியாபாரங்களில் இருந்து சேகரிக்கப்படுகின்றது.

TDF என்பது EL மற்றும் TDL ஆகிய இரண்டினதும் கூட்டலாகும்.

2005இன் சுற்றுலாத்துறை சட்ட இல 38இல் நிர்ணயிக்கப்பட்டுள்ள வீதாசாரத்தின் பிரகாரம் SLTDA, SLTPB, SLITHM, SLCB ஆகியவற்றிற்கு TDF பகிர்ந்தளிக்கப்படும்.

2019ஆம் ஆண்டிற்கான TDF 3,013.54 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன் 2020ஆம் ஆண்டில் அது 1,030.44 மில்லியன் ரூபாவாக மாத்திரமே இருந்தது. 2020இல், கோவிட் -19 நெருக்கடி காரணமாக TDFஇன் மொத்தத் தொகை ஏறக்குறைய இரண்டு பில்லியனால் அல்லது 65 வீதத்தால் குறைவடைந்தது.

இவ்வறிக்கையானது 2020ஆம் ஆண்டிற்கான நிதியத்தின் சேகரிப்பு மற்றும் விநியோகம் தொடர்பிலான விபரங்களைக் கொண்டுள்ளது.

நன்றி,
தங்கள் உண்மையுள்ள,

கிமர்லி பெர்னாண்டோ
தலைவர் -இலங்கை சுற்றுலாத்துறை



## உள்ளடக்கம்


அ. அறிமுகம்

ஆ. சுற்றுலா அபிவிருத்தி நியதித்தின் (TDF) நிதிசார் கூற்றுக்கள்

2020 திசெம்பர் 31ஆந் திகதியல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றுகைக் கூற்று

இ. உரிமையாண்மையில் மாற்றக் கூற்று

2020 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

ஈ. கணக்குகளுக்கான குறிப்புக்கள்

**அட்டவணைகள்**

அட்டவணை 1 - SLTPB, SLTDA, SLITHM, SLCB ஆகியவற்றிற்கு TDF வீதாசாரப் பகிர்வு

அட்டவணை 2 - SLTDA,SLTPB, SLITHM, SLCB ஆகியவற்றிற்கு பகிர்ந்தளிக்கப்பட்ட TDF மில்லியன் ரூபாவில் - 2019 மற்றும் 2020


**பயன்படுத்தப்பட்ட சொற்றொடர்ச் சுருக்கம்**

| | | |
|---|---|---|
| EL | - | புறப்படுதல் வரி |
| SLCB | - | இலங்கை மாநாட்டுப் பணியகம் |
| SLITHM | - | இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்து நிறுவகம் |
| SLTDA | - | இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை |
| SLTPB | - | இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டுப் பணியகம் |
| TDF | - | சுற்றுலாத்துறை அபிவிருத்தி நிதியம் |
| TDL | - | சுற்றுலாத்துறை அபிவிருத்தி வரி |



# அ. அறிமுகம்

2005இன் சுற்றுலாத்துறை சட்ட இல 38இன் 23(1) பிரிவின் கீழ் சுற்றுலா அபிவிருத்தி நிதியம் (TDF) தாபிக்கப்பட்டதுடன் இந்நிதியம் சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்கும் மேம்பாட்டிற்கும் பயன்படுத்தப்படுகின்றது. TDF ஆனது SLTDA யினால் முகாமை செய்யப்பட்டு நிர்வகிக்கப்படும்.

2005இன் சுற்றுலாத்துறை சட்ட இல 38இன் 23(2) பிரிவு மற்றும் 2003இன் நிதிச் சட்ட இல 25இன் 2(1) பிரிவின் பிரகாரம், சிவில் விமானத்துறை அதிகாரசபையால் திரட்டப்படும் புறப்படுதல் வரி(EL)யில் 1/3 வுனுகுஇற்கு அனுப்பி வைக்கப்படும். மேலும், 2003இன் நிதிச் சட்ட இல 25இன 12 பிரிவின் படி ளுடுவுனுயுயின் பணிப்பாளர் நாயகத்தினால் பதிவுசெய்யப்பட்ட எல்லா சுற்றுலாத்துறை நிறுவனங்களில் இருந்தும் திரட்டப்படும் வுனுடு தொகையும் வுனுகுஇற்கு அனுப்பி வைக்கப்படும். 2005இன் சுற்றுலாத்துறை சட்ட இல 38இன் 24(8) பிரிவின் பிரகாரம், வுனுகுஇன் வரவில் உள்ள அனைத்து பணமும் பின்வருமாறு விநியோகிக்கப்படும்:

அ) 2005இன் சுற்றுலாத்துறை சட்ட இல 38இன் 40ஆவது பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட SLTPBஇற்கு 70மூ தொகையளவு

ஆ) 2005இன் சுற்றுலாத்துறை சட்ட இல 38இன் 2ஆவது பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட SLTDAஇற்கு 14மூ தொகையளவு

இ) 2005இன் சுற்றுலாத்துறை சட்ட இல 38இன் 33ஆவது பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட SLITHMஇற்கு 12மூ தொகையளவு

ஈ) 2005இன் சுற்றுலாத்துறை சட்ட இல 38இன் 42ஆவது பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட SLCBஇற்கு 4மூ தொகையளவு

அட்டவணை 1 - SLTPB, SLTDA, SLITHM, ளுடுஊடீ ஆகியவற்றிற்கு TDF வீதாசாரப் பகிர்வு




இவ்வறிக்கையானது 2020ஆம் ஆண்டிற்கான TDFஇன் கிடைக்கப்பெற்ற பணம் மற்றும் விநியோகம் தொடர்பிலான விபரங்களை வழங்குகின்றது.

## சுற்றுலா அபிவிருத்தி நிதியம்
2020 திசெம்பர் 31ஆந் திகதி உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு இல. | 2020 ரூபா. | 2019 ரூபா. |
|---|---|---|---|
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகளும் | 3 | 316,557,432 | 170,015,643 |
| பெறுவனவுகள் | 4 | 240,366,762 | 120,391,056 |
| **மொத்த சொத்துக்கள்** | | **556,924,194** | **290,406,699** |
| பொறுப்புக்கள் | | | |
| நடைமுறை பொறுப்புக்கள் | | | |
| செலுத்தப்படவேண்டியவை | 5 | 57,955,921 | 11,850,064 |
| இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை | | 69,855,558 | 38,997,929 |
| இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம் | | 349,277,791 | 194,989,644 |
| இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் | | 59,876,193 | 33,426,796 |
| இலங்கை மாநாட்டுப் பணியகம் | | 19,958,731 | 11,142,265 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **556,924,194** | **290,406,699** |

பக்கங்கள் 13 முதல் 16 வரையான கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும். இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். இந்நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு சபை சார்பாக கையொப்பம் இடப்பட்டுள்ளன.

.............................................
**சம்பத் கணேபலஆரச்சி**
பணிப்பாளர்/நிதி முகாமைத்துவம்

| ..................................... | ..................................... | ..................................... |
|---|---|---|
| **கிமர்லி பெர்னாண்டோ** | **தம்மிக்கா விஜயசிங்க** | **எம் சாந்தி குமார்** |
| தலைவர் | பணிப்பாளர் நாயகம் | சபை உறுப்பினர் |



## சுற்றுலா அபிவிருத்தி நிதியம்
2020 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதி செயலாற்றுகைக் கூற்று

| | குறிப்பு இல. | 2020 ரூபா. | 2019 ரூபா. |
|---|---|---|---|
| **வருவாய்** | | | |
| சுற்றுலா அபிவிருத்தி வரி மற்றும் புறப்படுதல் வரி | | | |
| ஏனைய வருவாய் | 6 | 1,030,435,838 | 3,013,539,831 |
| மொத்த வருவாய் | 7 | 6,855,193 | 22,643,312 |
| **செலவீனங்கள்** | | **1,037,291,031** | **3,036,183,143** |
| **நிதிய நிர்வாகச் செலவு** | | | |
| நிதிச் செலவு | 8 | 3,568,709 | 5,061,956 |
| நிதி வழங்கல் | 9 | 504,786 | 107,307 |
| நிதியத்திலிருந்து செலவு செய்தல் | 10 | 1,030,121,231 | 3,031,013,880 |
| திறைசேரிக்கு TDL 5% பணம் அனுப்புதல் | | | |
| **மொத்தச் செலவீனங்கள்** | 11 | 3,096,305 | - |
| **காலப்பகுதிக்கான மிகை/(பற்றாக்குறை)** | | **1,037,291,031** | **3,036,183,143** |
| **காலப்பகுதிக்கான மிகை/(பற்றாக்குறை)** | | **-** | **-** |

**உரிமையாண்மையில் மாற்றக் கூற்று**

சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் முகாமை மற்றும் நிர்வாகம் 2003இன் இல. 25 நிதிச் சட்டத்தின் மற்றும் 2005இன் இல. 38 சுற்றுலாச் சட்டத்தின் பிரகாரம் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகின்றன. அதனால், உரிமையாண்மையில் மாற்றக் கூற்று சுற்றுலா அபிவிருத்தி நிதியத்திற்கு தயாரிக்கப்பட மாட்டாது. மேலும், கொடுக்கல் வாங்கல்களின் விளைவாக நிதியம் இலாபத்தையோ அல்லது நட்டத்தையோ உருவாக்கவுமில்லை. 2005இன் இல. 38 சுற்றுலா சட்டத்தின் பிரிவு (24)(8)(அ)வின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மொத்தத் தேறிய பெறுவனவு நான்கு நிறுவனங்களுக்கு இடையில் பின்வருமாறு விநியோகிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம் (SLTPB) | 70% |
| இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA) | 14% |
| இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் (SLITHM) | 12% |
| இலங்கை மாநாட்டுப் பணியகம் (SLCB) | 04% |

**சுற்றுலா அபிவிருத்தி நிதியம்**

2020 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

காசுப் பாயச்சல் கூற்று

| | குறிப்பு இல. | 2020 ரூபா. | 2019 ரூபா. |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து காசுப் பாய்ச்சல்** | | | |
| **பெறுவனவுகள்** | | | |
| சுற்றுலா அபிவிருத்தி வரி மற்றும் புறப்படுதல் வரி | 12 | 899,055,449 | 3,871,213,085 |
| ஏனைய பெறுவனவுகள் | | 212,385,589 | 64,463,131 |
| **கொடுப்பனவுகள்** | | | |
| பிரித்துக் கொடுத்தல் | 13 | (809,709,592) | (4,129,128,767) |
| ஏனைய கொடுப்பனவுகள் | | (155,189,670) | (60,083,224) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து தேறிய காசுப் பாய்ச்சல்** | | **146,541,776** | **(253,535,775)** |
| நிதிசார் நடவடிக்கைகளில் இருந்து தேறிய காசுப் பாய்ச்சல் | | | |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் காசும் காசுக்குச் சமமானவையும் | | 170,015,656 | 423,551,431 |
| காலப்பகுதியின் இறுதியில் காசும் காசுக்குச் சமமானவையும் | | 316,557,432 | 170,015,656 |
| **காசு மற்று காசுக்கு சமமானவையில் தேறிய குறைதல்/(அதிகரித்தல்)** | | **146,541,776** | **(253,535,775)** |



**கணக்குகளுக்கான குறிப்புகள்**

1. **சுற்றுலா அபிவிருத்தி நிதியம்**
   2005இன் இல. 38 சுற்றுலா சட்டத்தின் பிரிவு 23(ஐ)இன் பிரகாரம் "சுற்றுலா அபிவிருத்தி நிதியம்" என்ற பெயரில் ஒரு நிதியம் நிறுவப்படுதல் வேண்டும். இந்நிதியம் சுற்றுலாத்துறையில் அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படல் வேண்டும். TDLஇன் சேகரிப்பு மற்றும் விநியோகம் . 2003இன் இல. 25 நிதிச் சட்டத்திற்கு மற்றும் 2005இன் இல. 38 சுற்றுலா சட்டத்திற்கு இணங்க மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

2. **கணக்கீட்டுத் தேவைப்பாடுகள்**
   நிதியக் கணக்குகள் இலங்கைப் பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கலாகத் தயாரிக்கப்படுகின்றன.

3. **காசும் காசுக்குச் சமமானவையும்**

| விபரம் | 2020 ரூபா | 2019 ரூபா |
|---|---|---|
| இலங்கை வங்கிக் கணக்கு இல. 7122882 | 263,032,364 | 149,933,995 |
| இலங்கை வங்கி நேரடி வைப்புக் கணக்கு இல. 73104820 | 53,525,068 | 20,081,647 |
| **மொத்தம்** | **316,557,432** | **170,015,643** |

4. **பெறுவனவுகள்**

| விபரம் | 2020 ரூபா | 2019 ரூபா |
|---|---|---|
| புறப்படுதல் வரி பெறுவனவு | 69,166,567 | - |
| TDL பெறுவனவு | 170,351,252 | 120,000,000 |
| கடன்பட்டோர் - ஏனைய | 848,943 | 391,056 |
| **மொத்தம்** | **240,366,762** | **120,391,056** |

5. **செலுத்த வேண்டியவை**

| விபரம் | 2020 ரூபா | 2019 ரூபா |
|---|---|---|
| TDFஉடனான SLTDA நடைமுறைக் கணக்கு | 1,638,865 | 1,399,779 |
| திரண்ட செலவீனங்கள்- நிர்வாகக் கட்டணங்கள் | 2,521,883 | 1,245,082 |
| திரண்ட செலவீனங்கள்- கணக்காய்வுக் கட்டணங்கள் | 429,945 | 207,945 |
| திரண்ட செலவீனங்கள்- முத்திரைக் கட்டணங்கள் | 84,475 | 52,975 |
| ஏனைய நடைமுறைப் பொறுப்புக்கள் | 51,933,332 | 7,317,473 |
| திறைசேரிக்கு TDL 0.5% பணம் அனுப்புதல் | 1,347,219 | 1,626,609 |
| நிறுத்திவைத்த உழைப்பக்கள் | 202 | 202 |
| **மொத்தம்** | **57,955,921** | **11,850,064** |

## 6. வரிகள் - நிதிய மூலங்கள்

| விபரம் | 2020<br>ரூபா | 2019<br>ரூபா |
|---|---|---|
| 6.1 புறப்படுதல் வரி | 489,503,510 | 2,089,294,245 |
| 6.2 சுற்றுலா அபிவிருத்தி வரி | 537,836,023 | 924,245,586 |
| 6.3 TDL 0.5% சேகரிப்பு | 3,096,305 | - |
| **மொத்தம்** | **1,030,435,838** | **3,013,539,831** |

### 6.1 புறப்படுதல் வரி

சுற்றுலா சட்டத்தின் பிரிவு 23(2)(அ)வின் பிரகாரம் சிவில் விமானத்துறை அதிகாரசபையினால் இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தப்படும் 15 அமெரிக்க டொலர்களில் புறப்படுதல் வரியாக (5 அ.டொலருக்குச் சமமான) 1/3 பங்கு தொகை சேகரிக்கப்படுகின்றது.

| விபரம் | 2020<br>ரூபா | 2019<br>ரூபா |
|---|---|---|
| பெறப்பட்ட தொகை | 420,336,942 | 2,089,294,245 |
| பெறவேண்டிய தொகை | 69,166,568 | - |
| **மொத்த புறப்படுதல் வரி** | **489,503,510** | **2,089,294,245** |

**முக்கிய குறிப்பு**

**புறப்படுதல் வரி பெறவேண்டியவை (2019)**

புறப்படுதல் வரி 2019 செப்தெம்பர் 15ஆந் திகதி முதல் 2020 ஜனவரி 30ஆந் திகதி வரை அமுலுக்கு வரும்வகையில் பிராந்திய வணிக விமானங்களை இயக்குவதற்காக யாழ்ப்பணம் (பலாலி) சர்வதேச விமானநிலையத்தின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தவதற்காக 19/2797/123/110 இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 1050 மில்லியன் ரூபா புறப்படுதல் வரி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இலங்கை சிவில் விமானத்துறை அதிகாரசபை 1050 மில்லியன் ரூபா தொகையினை அதன் பிரகாரம் நிறுத்தி வைக்கப்பட்டமையை உறுதிப்படுத்தியுள்ளது.

### 6.2 சுற்றுலா அபிவிருத்தி வரி (TDL)

2003இன் இல 25 நிதிச் சட்டத்தின் பிரகாரம் எல்லா சுற்றுலா நிறுவனங்களும் சுற்றுலா அபிவிருத்தி வரியினைச் செலுத்த வேண்டியுள்ளது. இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை TDLஇனைச் சேகரித்து சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தில் வரவு வைத்துள்ளது. 2020 ஜனவரி முதல் திசெம்பர் வரையிலான காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட சுற்றுலா அபிவிருத்தி வரி 367 மில்லியன் ரூபாவாகும். மேலும், 2020 ஒக்டோபர் முதல் திசெம்பர் வரையிலான காலப்பகுதியில் 170 மில்லியன் ரூபா மதப்பீடு மேற்கொள்ளப்பட்டது.



| விபரம் | 2020<br>ரூபா | 2019<br>ரூபா |
|---|---|---|
| 2020 ஜனவரி - திசெம்பர் வரை பெறப்பட்ட தொகை | 354,847,132 | 708,815,904 |
| 2020 ஒக்டோபர் - திசெம்பர் வரை பெறவேண்டிய தொகை | 170,351,252 | 120,000,000 |
| 2019 ஒக்டோபர் - திசெம்பர் வரையிலான ஏற்பாட்டின் கீழ் | 12,738,706 | 95,833,496 |
| TDL மீளளிப்பு | (101,067) | (403,814 ) |
| **2020 ஜனவரி - திசெம்பர் வரையிலான மொத்த TDL** | **537,836,023** | **924,245,586** |

## 7. ஏனைய வருவாய்

ஏனைய வருவாயானது, நிதிச் சட்டத்தின் பிரகாரம் உரிய திகதியில் TDLஇனைச் செலுத்தாத பதிசெய்யப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து அறவிடப்படும் தவறியயமைக்கான வட்டியினைப் பிரதனமாகக் கொண்டது.

| விபரம் | 2020<br>ரூபா | 2019<br>ரூபா |
|---|---|---|
| தவறியமைக்கான வரி | 6,261,796 | 21,159,720 |
| 20 % மிகை அறவீடு | 593,398 | 1,483,330 |
| ஆண்டிற்கு சேகரிக்கப்பட்ட தவறியமைக்கான வரி | 6,855,193 | 22,643,049 |
| ஏனைய வருமானம் | - | 263 |
| **மொத்தம்** | **6,855,194** | **22,643,312** |

## 8. நிதிய நிர்வாகக் கிரயம்

| விபரம் | 2020<br>ரூபா | 2019<br>ரூபா |
|---|---|---|
| முத்திரை வரி | 31,500 | 74,400 |
| நிர்வாகச் செலவீனங்கள் | 3,315,209 | 4,732,256 |
| கணக்காய்வுக் கட்டணம் | 222,000 | 255,300 |
| **மொத்தம்** | **3,568,709** | **5,061,956** |

## 9. நிதிக் கிரயம்

| விபரம் | 2020<br>ரூபா | 2019<br>ரூபா |
|---|---|---|
| வங்கி அறவீடுகள் | 59,900 | 107,307 |
| சேகரிப்புத் தரகு | 442,886 | - |
| சேவைக் கட்டணங்கள் | 2,000 | - |
| **மொத்தம்** | **504,786** | **107,307** |

**10. நிதிய விநியோகம்**

2005இன் இல 38 கொண்ட சுற்றுலா சட்டத்தின் 24(8)ஆம் பிரிவின் பிரகாரம் பணத்தைப் பெற்றுக்கொடுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| விபரம் | 2020<br>ரூபா | 2019<br>ரூபா |
|---|---|---|
| இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை | 144,216,972 | 424,341,943 |
| இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம் | 721,084,862 | 2,121,709,716 |
| இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் | 123,614,548 | 363,721,666 |
| இலங்கை மாநாட்டுப் பணியகம் | 41,204,849 | 121,240,555 |
| **மொத்தம்** | **1,030,121,231** | **3,031,013,880** |

**11. திறைசேரிக்கு TDL 0.5% பணம் அனுப்புதல்**

| விபரம் | 2020<br>ரூபா | 2019<br>ரூபா |
|---|---|---|
| திறைசேரிக்கு TDL 0.5% பணம் அனுப்புதல் | 3,096,305 | - |
| **மொத்தம்** | **3,096,305** | - |

**குறிப்பு**

2003இன் இல 25 நிதிச் சட்டத்தின் திருத்தப்பட்ட பகுதி ைைஇன் பிரகாம், 2019 ஜனவரி 1ஆந் திகதியுடன் அமுலுக்கு வருமாறு 12 மில்லியனை விடக் குறைவான வருடாந்த மொத்த வருவாயைக் கொண்டவர்களின் மொத்த வருவாய் மீது TDL அறவிடப்படும்.

2020ஆம் ஆண்டின் போது TDLஇன் 0.5%ஆக 3,096,305 ரூபா சேகரிக்கப்பட்டுள்ளது.

**12. சுற்றுலா அபிவிருத்தி வரி மற்றும் புறப்படுதல் வரி**

| விபரம் | 2020<br>ரூபா | 2019<br>ரூபா |
|---|---|---|
| 2020இற்கான சுற்றுலா அபிவிருத்தி வரி | 478,724,505 | 1,313,607,842 |
| 2020இற்கான புறப்படுதல் வரி | 420,330,943 | 2,557,605,243 |
| **மொத்தம்** | **899,055,449** | **3,871,213,085** |

**13. விநியோகம்**

| விபரம் | 2020<br>ரூபா | 2019<br>ரூபா |
|---|---|---|
| விநியோகம் | 809,709,592 | 4,129,128,767 |
| **மொத்தம்** | **809,709,592** | **4,129,128,767** |



**SRI LANKA TOURISM DEVELOPMENT FUND**
No. 80, Galle Road, Colombo 03
Tel : +94 112426800 / +94 112426900 / 2437055/59/60
Fax : +94 112 444165 / 2426984
Email : info@srilanka.travel